# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 17/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **பச்சியண்ணன்** | மதம் | ,, | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **குப்பாகவுண்டர்** | தொழில் | .. | **கூலி வேலை** |
| வயது | .. | 75 | நாள் | .. | 31.01.2024 |
| கிராமம் | .. | **கன்னந்தேரி** | | | |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் நாள் புதன்கிழமை திரு. பச்சியண்ணன் த/பெ. குப்பாகவுண்டர் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 1 ம் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) வா.த.சா.1 ன் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 01.04.2017 தேதியிட்ட 1 ம் வாதிக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 1 ம் வாதியின் குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 28.03.2015 தேதியிட்ட கன்னந்தேரி பஞ்சாயத்தால் 1 ம் வாதிக்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 17.02.2021 தேதியிட்ட கன்னந்தேரி பஞ்சாயத்தால் 1ம் வாதிக்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.த.சா.ஆ.**5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 23.12.2000 தேதியிட்ட கன்னந்தேரி பஞ்சாயத்தால் 1ம் வாதிக்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.த.சா.ஆ.**6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 11.09.2017 தேதியிட்ட 1ம் வாதி பெயரிலுள்ள மின் கட்டண ரசீது அசல் **வா.த.சா.ஆ.**7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 02.08.2021 தேதியிட்ட 1ம் வாதி பெயரிலுள்ள மின் கட்டண ரசீது அசல் **வா.த.சா.ஆ.**8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 2ம் வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.**9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 09.12.2021 தேதியிட்ட கன்னந்தேதி பஞ்சாயத்தால் 2ம் வாதிக்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.த.சா.ஆ.**10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) வழக்கு சொத்திற்கான குறுந்தகடு மற்றும் புகைப்படங்கள் (6 எண்ணிக்கை) **வா.த.சா.ஆ.**11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/பச்சியண்ணன்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்ககிரி.